# 1. கண்ணாமூச்சி



தற்காலத்தில் குழந்தைகளிடையே ஓடியாடி விளையாடும் பழக்கம் குறைந்துள்ளது. ஓடியாடி விளையாடுவதால் உடல் வியர்த்து, தேவையில்லாத உப்பு நீர் வெளியேறுகிறது. இதனால் நமக்கு உடல் சுறுசுறுப்பு அடைகிறது. இவ்வாறு ஓடியாடி விளையாடும் வகையில் அமைந்துள்ளது தான் கண்ணாமூச்சி விளையாட்டு. கண்ணைக் கையால் மூடிக்கொண்டு விளையாடும் விளையாட்டு கண்ணாமூச்சி ஆகும். பின்னாளில் துணியால் கண்ணைக் கட்டிக்கொண்டு விளையாடுவதாக மாறியுள்ளது. இது ஒழிந்து பிடித்தல், ஓடிப்பிடித்தல் போன்ற எளிமையான பெயர்களில் அழைக்கப்படுகிறது.

ஒளிந்து நின்று திடீரென கண்முன் தோன்றி மகிழ்விக்கும் விளையாட்டு அப்பூச்சி விளையாட்டு ஆகும். அதாவது சிறுகுழந்தைகள் தன் முகம் மற்றும் கண்களை பொத்திக்கொண்டு திடீரென 'பே' என்று கத்தியும் கண் இமைகளை வெளிநோக்கி மடித்துக் கொண்டும் பயமுறுத்துவர். இச்செயலைக் கண்டு பெற்றோர்கள் பயப்படுவது போல ஒளிந்து நின்று, மீண்டும் குழந்தை முன் தோன்றி மகிழ்விப்பதாகும். இந்த அப்பூச்சி விளையாட்டு, கண்ணாம்பூச்சி ஆக மாற்றம் பெற்று காலப்போக்கில் கண்ணாம்மூச்சியாக மாறியுள்ளது. கண்ணன் அப்பூச்சி காட்டி விளையாடியதை,

"வேயின் குழல் ஊதி வித்தகனாய் நின்ற
ஆயன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான்,
அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான்!"

என்ற திருமொழி பாடல் மூலம் பெரியாழ்வார் குறிப்பிட்டுள்ளார். தளர் நடைப் பருவத்தில் தாய்மார்கள் குழந்தைகளுக்குக் கண்ணாம்பூச்சி விளையாடக் கற்றுக்கொடுத்து நடைப்பயிலப் பழக்குவர்.

# 2. கிட்டிப்புள்ளு

நாகரிக உலகில் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுக்கள் மத்தியில் பாரம்பரியமான கிட்டிப்புள்ளு எனும் விளையாட்டானது மறைந்து போய்விட்டது. இதனைக் கில்லிதண்டா, குச்சிக்கம்பு, குச்சி அடித்தல், சில்லாங்குச்சி, இந்தி மொழியில் கிட்டிதக்கா எனப் பல பெயர்களில் அழைப்பர். சிறுவர்கள், சிறுமியர்கள் என அனைவரும் இவ்விளையாட்டினை விளையாடுவார்கள். இவ்விளையாட்டினை விளையாடுவதற்கு கிட்டிப்புள், கிட்டிகோள் ஆகிய இரு கருவிகள் தேவைப்படும். சிறுவர்கள் விளையாடும் பொழுது இவற்றால் காயமடைவதும் உண்டு. அடுத்தவர் மீது கிட்டிப்புள் படாதவாறு, கவனமாகப் பார்த்து விளையாட வேண்டிய விளையாட்டு ஆகும்.



## கிட்டிப்புள் விளையாடும் முறை:

கிட்டிப்புள் விளையாட ஒரு அடி நீளமுள்ள கம்பு ஒன்றை தயாரித்தல் வேண்டும். மற்றொரு சிறிய கம்பினை எடுத்து முனையை இருபக்கமும் கூர்மையாகச் செதுக்க வேண்டும். இதனைக் 'கிட்டிப்புள்' என்று அழைப்பர். பின்னர் மண் தரையில் ஒரு ஜான் அளவில் குழியைத் தோண்ட வேண்டும். தோண்டிய குழியில், செதுக்கி வைத்திருக்கும் சிறிதான கிட்டிப்புள்ளை வைக்க வேண்டும். பின்னர் ஒரு அடி நீளமுள்ள கம்பினால் குழியில் உள்ள கிட்டிப்புள்ளை அடிக்க வேண்டும். சுற்றியுள்ள நபர்கள் கிட்டிப்புள்ளைப் பிடித்துவிட்டால் தோற்றவர் ஆவார்.

# 3. கோலிக்குண்டு



கோலிக்குண்டுகளை வைத்து விளையாடும் விளையாட்டு. கோலிக்குண்டு உருண்டையாகவும், பல வண்ணமாகவும் இருக்கும். சிறுவர்கள் விடுமுறை நாட்களில் விரும்பி விளையாடும் விளையாட்டாகும். கோலிக்குண்டுகளை தங்கள் அரைக்கால் சட்டைப் பையில் போட்டுக்கொள்வார்கள். பையில் உள்ள குண்டுகள் ஒன்றுடன் ஒன்று உரசும் போது உண்டாகும் சத்தத்தைக் கேட்டு ரசிப்பார்கள். கோலிக்குண்டு விளையாட்டினை எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். முக்கோணம் மற்றும் வட்ட வடிவில் கட்டம் போட்டும் விளையாடப்படும்.

**கோலிக்குண்டு விளையாடும் முறை:**

விளையாடும் முன் தரையில் கட்டம் போட வேண்டும். பின் கட்டத்தின் உள்ளே ஐந்து குண்டுகளை வைக்க வேண்டும். விளையாடுபவர்கள் ஒரு குண்டினைக் கையில் எடுத்துக் கொண்டு வலது கையைத் தரையில் ஊன்றி ஒரு விரலை மண்ணில் படும்படியும் நடு விரலின் மேல் குண்டினை வைத்து இடது ஆட்காட்டி விரலால் பிடித்து குண்டினைக் குறி வைத்து அடிக்க வேண்டும். கட்டத்தில் உள்ள குண்டுகள் அனைத்தையும் அடிப்பவர் வெற்றியாளர் ஆவார்.



# 5. தட்டாங்கல்



சிறுமியர்கள் விளையாடும் விளையாட்டு ஆகும். கற்களை மேலே போட்டு அவை கீழே வருவதற்குள் தரையைத் தட்டி கற்களைப் பிடிப்பதால் 'தட்டாங்கல்' என்று அழைக்கப்படுகிறது. இதனை சங்க காலத்தில் கழங்காடுதல், கழற்சிக் காய் விளையாட்டு என்று அழைப்பர். கற்களுக்கு மாற்றாகக் கழற்சிக் காய்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

தட்டாங்கல் விளையாட்டினை வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு எண்ணிக்கையில் உள்ள கற்களைக் கொண்டு விளையாடுவார்கள். கற்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒண்ணான் கல், இரண்டான் கல், மூன்றான் கல் எனப் பிரித்துக் கொண்டு விளையாடுவர். விளையாட்டு விறுவிறுப்பாகச் செல்ல,

" ஈரிப்புச் செண்டுப்பூ
ஈரிப்புச் செண்டுப்பூ இருதலையும் முல்லப்பூ
சூடிமுடிப்பவர்க்கு கொண்டையெலாம் தாழம்பூ ".

என்ற பாடலைப் பாடிக் கொண்டே ஆடுவர்.





# 6. நுங்கு வண்டி





இன்றைய தலைமுறைக் குழந்தைகளுக்குப் பழமையான விளையாட்டுக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவு. அவர்கள் பிளாஸ்டிக்காலான (நெகிழி) வண்டியை விளையாட்டுப் பொருட்களாகப் பயன்படுத்தியிருப்பர். ஆனால் பனை மரத்தில் இருந்து கிடைக்கும் நுங்குக் கூடினால் செய்த வண்டியைப் பார்த்திருக்க மாட்டார்கள். இதனை 'நுங்கு வண்டி' என அழைப்பர். இது ஒரு வித்தியாசமான வண்டி. சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத, இயற்கைப் பொருளால் செய்யப்பட்ட வண்டி எனவும் கூறலாம்.

**விளையாடும் முறை:**



நுங்கு வண்டி விளையாட்டிற்கு சம அளவுள்ள இரு நுங்குக் கூடுகளும் அதனை இணைப்பதற்கு ஒரு சிறிய குச்சியும் தேவைப்படும். இப்பனை நுங்கின் மேற்பகுதியில் கண்கள் போன்ற துளையில் அரை அடி நீளமுள்ள குச்சியை இணைத்து (சொருகி) நுங்கு வண்டியை சிறுவர்களே செய்து கொள்வார்கள். பின்பு இந்த நுங்கு வண்டியைத் தள்ளுவதற்கு V வடிவிலான ஒரு அடி நீளமுள்ள கம்பைத் (கவைக் கம்பு) தயார் செய்து கொள்வார்கள். இவ்வாறு நுங்கு வண்டியைச் செய்த பிறகு போட்டிக்கான எல்லைப் பகுதியாகக் குறிப்பிட்டப் பகுதியைத் தேர்வு செய்து கொள்வார்கள். பின்பு அவ்விடத்திற்கு வண்டியை ஓட்டிக்கொண்டு வேகமாக ஓடிச் சென்று முதலில் எல்லையைத் தொடுபவரே வெற்றி பெற்றவர் ஆவார்.